

தமிழ்நாடு முதலமைச்சர் கோயம்புத்தூர் மாவட்டத்தில் சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறை மூலம், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் "தமிழ்ப் புதல்வன்" என்ற திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து, விருதுநகர் மாவட்டத்தில், விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி கலையரங்கத்தில் இத்திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் , தலைமையில் , விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர். ஆர்.சீனிவாசன், சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் ஜி.அசோகன், சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் துவக்கி வைத்து , 8431 மாணவர்களுக்கு ஊக்கத்தொகையுடன் , வேலைவாய்ப்பு வழிகாட்டி புத்தகம் , தமிழ் பெருமிதம் புத்தகம் அடங்கிய "தமிழ்ப் புதல்வன்" பெட்டகப்பை மற்றும் வங்கிப் பற்று அட்டை ( Debit Card ) களை வழங்கினார்கள்.



இராமநாதபுரம் மாவட்டம் கமுதி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மாற்றுக் கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம் கமுதி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட மண்டலமாணிக்கம் பாக்குவெட்டி, கீழ ராமா நதி, மேல ராமநதி போன்ற கிராமங்களில் இருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஓ பன்னீர்செல்வம் அமைப்பில், இருந்தும் பாரதிய ஜனதா கட்சி, நாம் தமிழர் கட்சி, புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த 300 க்கும் மேற்பட்ட தொண்டர்கள் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் எம். முத்துராமலிங்கம், ஒன்றிய செயலாளர் கடலாடி மாயன், கமுதி மனோகரன், சண்முகம் ,மற்றும் போகலூர் ஒன்றிய கழகச் செயலாளர் கதிரவன், பரமக்குடி நகரக் கழகச் செயலாளர் ஜீவரத்தினம்,கமுதி ஒன்றிய பெருந்தலைவர் தமிழ்ச்செல்வி போஸ், உட்பட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை கமுதி வடக்கு ஒன்றிய செயலாளர் வி. வாசுதேவன், ஒருங்கிணைப்பு செய்திருந்தார்.

### அருந்ததியர் உள்ஒதுக்கீடு: வழக்கை தாமதப்படுத்தியது அ.தி.மு.க. அரசுதான்!

# எடப்பாடி பொய் மூட்டைகளை அவிழ்த்துவிடுவதா?

## ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான் ஆணித்தரமான கண்டன அறிக்கை!

சென்னை, ஆக. 11-

"அருந்ததியர் உள்ஒதுக்கீட்டு வழக்கை தாமதப்படுத்தியது அ.தி.மு.க. அரசு தான். இது தெரியாமல் எடப்பாடி பழனிசாமி பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுவதா?" என்று ஆதித்தமிழர் பேரவை கண்டனம் தெரிவித்துள்ளது.



இதுகுறித்து ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் 2009ல் தி.மு.க. ஆட்சி காலத்தில் பட்டியல் அருந்ததியர் உள்ளிட ஒதுக்கீடு சட்டம் செல்லும் என்ற வரலாற்றுச்சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியிருக்கிறது உச்சநீதி மன்றத்தின் அரசியல் சாசன அமர்வு.

இந்தப் புகழ் தி.மு.க.விற்கு சென்று விடுமோ என்று அஞ்சி அதை ஏற்றுக் கொள்ள மனமில்லாத எடப்பாடி பழனிச்சாமி அறிக்கை என்கிற பெயரில் அப்பட்டமான பொய்களால் நிரப்பி புகழ் மாலையை தனக்குத்தானே சூட்டியுள்ளதற்கு ஆதித்தமிழர் பேரவை வன்மையாக கண்டிப்பதோடு இதற்கு தக்க பாடம் புகட்டுவோம் என்று எச்சரிக்கை விடுக்கின்றோம்.

கடந்த 1.8.2024 அன்று உச்சநீதிமன்றம் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திர சூட் தலைமையிலான ஏழு பேர் கொண்ட அரசியல் சாசன அமர்வு 2009ல் திமுக தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு "பட்டியல் அருந்ததியர் சமூக மக்களுக்கு வழங்கிய 3% உள்ளிட ஒதுக்கீடு சட்டம் செல்லும்" என தீர்ப்பு வழங்கி இருக்கிறார்கள். இத்தீர்ப்பு என்பது திராவிட இயக்கத்திற்கு கிடைத்த சமூகநீதியின் மற்றுமொரு கிரீடம் என்பதால் அருந்ததியர் உள்ளிட்ட அனைத்துச் சமூகத்தவரும் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி தமிழகம் முழுவதும் கொண்டாடி வருகின்றனர்.

இந்த தீர்ப்பு வந்த உடனேயே முதல்வர் ஸ்டாலின் அவர்கள் உள்ளிட்ட அனைத்துக் கட்சியினர் அருந்ததியர் மக்களுக்கு வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியினையும் தெரிவித்தார்கள்.

### வாய் கூசாமல் பொய் சொல்வதா?

ஆனால் தீர்ப்பு வெளியாகி ஏறத்தாழ மூன்று நாள் கழித்து கோமாவில் இருந்து எழுந்ததைப் போல் அருந்ததியர் உள்ளிட ஒதுக்கீடுக்கு துளியும் சம்மந்தமில்லாத எடப்பாடிபழனிச்சாமி ஒரு அப்பட்டமான பொய்யை அவிழ்த்து விட்டது போல் ஒரு அறிக்கையை தயார் செய்து வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையிலே ஏதோ அவர்களின் ஆட்சியில் பாதுகாத்ததன் விளைவாகத் தான் இந்த தீர்ப்பு கிடைத்தது என வாய்கூசாமல் பொய் சொல்லியிருக்கிறார்.

2009ல் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட "அருந்ததியர் உள் ஒதுக்கீடு சட்டம்" சகோதர சாதிகளால் வழக்கு மன்றத்திற்குச் சென்றது 2011பிப்ரவரி வரை மதுரை உயர்நீதி மன்றத்தால் உள்ளிட பாதுகாக்கப்பட்ட நிலையில், எதிர்தரப்பாளர்களால் மேல் முறையீடுக்கு சென்று உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

ஒதுக்கீடு இருந்த போதிலும் 2011க்குப் பிறகு முதலமைச்சரான ஜெயலலிதா அம்மையார் அவர்களிடம் சென்று அருந்ததியர் உள்ளிட ஒதுக்கீடை உச்சநீதி மன்றத்தில் தனி வழக்காக நடத்துங்கள் அப்போது தான் விரைவில் தீர்ப்பு

கிடைக்கும் என்றும் பஞ்சாப்,ஹரியானா,ஆந்திரா ஆகிய இந்த மூன்று வழக்கோடு இந்த வழக்கும் சேர்ந்து விசாரணை நடைபெற்றால் தீர்ப்பு கிடைக்க பல ஆண்டுகள் ஆகும் என வலியுறுத்தப்பட்டது.

### செவி சாய்க்காத ஜெயலலிதா!

இதற்கு செவி சாய்க்காத ஜெயலலிதா அவர்கள் தான் வெளியிட்ட "அருந்ததியர் உள் ஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு அதிகாரமில்லை" என்ற அறிக்கையை பாதுகாக்கிற வகையில் உச்சநீதிமன்றம் அனுப்பிய நோட்டீஸ்க்கு பதிலளிக்காமலும்,தமிழ்நாடு அரசு தரப்பு உச்சநீதி மன்ற வழக்கறிஞரை நியமிக்காமலும் இருந்து வந்தார்கள்.

இந்த உண்மையை மூடி மறைக்கும்விதமாக 2014 நாடாளுமன்றத் தேர்தலின் போது அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையாக அருந்ததியர்களுக்கு 6% இட ஒதுக்கீட்டை மக்களவை மூலம் பெற்றுத்தருவேன் என ஒரு வாக்குறுதியை தெரிவித்திருந்தார்.அந்த தேர்தலிலே 37 இடங்களை அ.தி.மு.க. வென்றிருந்தது இருந்த போதிலும் அருந்ததியர் பற்றி ஒரு முறையாவது வாய் திறந்திருப்பார்களா? என்றால் இல்லை என்பதே உண்மை.

### உச்சநீதிமன்றத்தில் வழக்கறிஞரை நியமிக்காதது ஏன்?

அதே சமயத்தில் அருந்ததியர் 6% இட ஒதுக்கீடு கோரிக்கைக்காக தோழர் நீலவேந்தன், தோழர் இராணி, தோழர் மகேஸ்வரன் ஆகியோர் தங்களை மாய்த்துக் கொண்ட போது இரங்கல் அறிக்கையாவது தெரிவித்திருப்பாரா? இந்த தனபால். இல்லையே வாய் மூடி கள்ளமவுனம் தான் காத்தார். சட்டமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் தீண்டாமை தமிழகத்தில் நடைபெற வில்லை என்ற பொய்யைத் பரப்பி மேசையைத் தட்டி மகிழ்ந்தனர் என்பதே வரலாறு.

அம்மையார் ஜெயலலிதா மறைவிற்குப் பிறகு 2016ல் கூவத்தூரில் நடந்த நாடகத்தில் தவழ்ந்து சென்று பாதம் தொட்டு பாதம் தொட்டு முதல்வரான முதல்வரான எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் நான்காண்டுகள் பதவியில் இருந்த போது அருந்ததியர் உள் ஒதுக்கீடுக்காக சிறுதும் வாய்திறந்து பேசியதில்லை. அப்போது வழக்கு விசாரணையில் இருந்து வந்தது அவருக்கு தெரியாதா? உச்சநீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஏன் நியமிக்கப்படவில்லை.

மேலும் 2020 ல் வழங்கிய இடைக்கால உத்தரவின் போது தமிழக அரசு தரப்பில் வழக்கறிஞர்களை நியமனம் செய்ய வில்லை என்பது தான் உண்மை அப்போதிருந்த ஆதிதிராவிட நலத்துறை உள்ளிட ஒதுக்கீடு பற்றி கமிட்டியும் போடவில்லை. துளி கூட வாயும் திறக்கப்படவே இல்லை. என்பது தான் உண்மை.

ஆக மொத்தத்தில் ஜெயலலிதா+பன்னீர் செல்வம்+எடப்பாடி ஆகியோர் தலைமையில் செயல்பட்ட அ.தி.மு.க.அரசு கலைஞர் கொண்டு வந்த உள் ஒதுக்கீடு சட்டத்தைஅலட்சியமாகவும் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே அணுகினார்களே தவிர அருந்ததியர் நலன் சிறிதும் எண்ணிப் பார்க்கப்பட வில்லை. இதனாலையே உரிய நேரத்தில் வழக்கறிஞர்களை நியமிக்காமல் மிக நீண்ட கால தாமதம் ஆனதற்கு அ.தி.மு.க. மட்டுமே முழுக் காரணம்.

மேலும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற வழக்கு ஆதித்தமிழர் பேரவை உள்ளிட்ட பல்வேறு அருந்ததியர் அமைப்புகளைச் சார்ந்த வழக்கறிஞர்களின் வாதத்தினால் தான் 2020 ல் இந்த இடைக்கால உத்தரவும் சாதகமாக அமைந்தது.

### தீர்ப்பு விரைவில் வரக்காரணம் முதல்வர் தான்!

மேலும் 2021ல் அமைந்த மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழக அரசால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் சேகர் நாப்தே அவர்கள் நீதியரசர் ஜனார்த்தனன் பரிந்துரையை சுட்டிக்காட்டி அரசின் சமூகநீதி கொள்கை முடிவு என முன் வைத்த வாதத்தால் தான் தீர்ப்பு விரைவில் வர முக்கிய காரணமாக அமைந்தது என்பது மட்டுந் தான் எதார்த்த உண்மை.

இந்த வரலாற்று உண்மையை புரிந்து கொண்ட அருந்ததியர்கள் இத் தீர்ப்பை வெகு விமரிசையாக பட்டாசுகள் வெடித்து இனிப்புகள் வழங்கி தி.மு.க .வினரோடு சேர்ந்து கொண்டாடினர்.இக்கொண்டாட்டத்தை ஏற்றுக்கொள்ளாத எடப்பாடி உள்ளிட ஒதுக்கீடுக்கு துளியும் சம்மந்தம் இல்லாத எடப்பாடி பழனிச்சாமி+தனபால் ஆகியோர் பாதிதூக்கத்தில் இருந்து எழுந்து பொய் மூட்டையை அவிழ்த்து விடுவது போல் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள்.

தீர்ப்பு வெளியான ஓரிரு நாட்களில் முதல்வர் அவர்கள் தன்னுடைய அலுவல் பணிகளை ஒதுக்கி வைத்து விட்டு ஆதித்தமிழர் பேரவை உள்ளிட்ட பல்வேறு அருந்ததியர் அமைப்புகளை சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேரில் சந்தித்து வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டார்கள். உண்மையிலேயே யார் நமக்கு நல்லது செய்துள்ளார்கள் என்று புரிந்து வைத்துள்ள ஒட்டுமொத்த அருந்ததியர்களும் மார்க்ஸிஸ்ட் மற்றும் தி.மு.க. மற்றும் அதன் தலைவர்களையும் சந்தித்து தமிழகம் முழுவதும் வாழ்த்துத் தெரிவித்து வந்தனர்.

இதை சகித்துக்கொள்ள முடியாமல் இருந்த எடப்பாடி அலுவல் பணி இல்லாத எடப்பாடி மக்களையே சந்திக்க திராணி இல்லாத சில அருந்ததியர் லெட்டர்பேடு இயக்கங்களை சென்னைக்கு வரவழைத்து கட்சி தலைமை அலுவலகத்தில் சந்திக்காமல் இவர்களை இழிவுக்குள்ளாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தன்னுடைய வீட்டின் கார் ஷெட்டிலே ஒரு போட்டோ ஷீட் நடத்தி வாழ்த்துக்களை பெற்றுக் கொண்டிருக்கிறார்.இது எவ்ளோ பெரிய அயோக்கியத்தனம் என்பதை நன்கு அறிவோம்.

அருந்ததியர் மக்களின் சமூகநீதி கோரிக்கையான இட ஒதுக்கீடுக்கு எதையும் செய்து தராமல் விரைந்து வர வேண்டிய தீர்ப்பிற்கு உரிய வழக்கறிஞர்களை நியமிக்காமல் குறுகிய வழக்கை காலத்தில் முடிக்காமல் ஏறத்தாழ 13ஆண்டு காலம் தாமதப்படுத்தியதற்கு அ.தி.மு.க.வே முதன்மைக் காரணம் என்பதோடு எடப்பாடி தனபால் ஆகியோர்கள் பொய்யான அறிக்கையை வெளியிட்டதற்குஎமது கண்டனமும் போலியான வாழ்த்துக்களை பெற்று அருந்ததியர்களை ஏமாற்ற துடிக்கும் அதிமுக எடப்பாடி & கோவிற்கு 12 வது தோல்வியை அருந்ததியர் மக்கள் நிச்சயம் வழங்குவார்கள் என்பதை ஆதித்தமிழர்பேரவை சார்பில் எச்சரிக்கை விடுக்கின்றது.

இவ்வாறு ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



மனித உரிமைகளை மறுக்கின்ற மூன்று குற்றவியல் சட்டங்களை ஒன்றிய அரசு திரும்பப் பெற வலியுறுத்தியும், ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிப்பை கண்டித்தும் தொழிலாளர் வினோத சட்டங்களை ஒன்றிய அரசு கைவிட வலியுறுத்தியும் திண்டுக்கல்லில் அனைத்து தொழிற்சங்கங்களின் சார்பில் தேசியக் கொடி ஏற்றி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்திற்கு தொ.மு.ச. பேரவை கவுன்சிலிங் செயலாளர் அழகர்சாமி தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டது. நிகழ்ச்சியில் தொ.மு.ச. பேரவை தலைவர் சென்றாயன், சி.ஐ. டி .யு பிரபாகரன், ஏ.ஐ.டி.யு.சி. நாச்சிமுத்து, ஐ.என். டி. யு. சி முருகன் ஹெ.ச் எம்.எஸ்,இப்ராஹிம் ஏ.ஐ.டி.யு.சி ரவி, எம்எல்எப் மோகன் உட்பட தொழிற்சங்க நிர்வாகிகள் திரளாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

### தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு

# வங்கி பற்று அட்டை - அரசின் உதவித்தொகை!

## அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

திண்டுக்கல், ஆக.11-

தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வங்கி பற்று அட்டையினை வழங்கி, அரசின் உதவித்தொகையினை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்



கள்ளிமந்தையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பூங்கொடி தலைமை வகித்தார்.

விழாவில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மாணவ, மாணவிகளின் கல்வி முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இந்த ஆண்டு கல்வித்துறைக்கு ரூ.44,044 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்

கல்வித்துறையும், சுகாதாரத்துறையும் 2 கண்கள் என்று கூறி கல்வித்துறைக்கு தொடர்ந்து பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக பெண்களின் பாதுகாப்பிற்காகவும், பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் 'புதுமைப் பெண்' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் 5615 மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டத்தில் மாணவர்களும் பயன்பெறும் வகையில் 'தமிழ்ப்புதல்வன்' திட்டம் நடப்பு கல்வி யாண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் கோவையில் இன்று தொடங்கி வைத்துள்ளார்கள். தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் 5112 பயன் பெறவுள்ளனர். ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் மட்டும் 520 மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இன்னும் ஏராளமான மாணவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. தகுதியுள்ளவர்கள் விடுபட்டிருந்தால் அவர்களையும் இத்திட்டத்தில் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் உதவித்தொகையினை மாணவர்கள் தங்களுடைய கல்வி வளர்ச்சிக்காக மட்டுமே பயன்படுத்தி, சிறந்த முறையில் கல்வி பயில வேண்டும்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், அரசு பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் நடப்பு கல்வியாண்டு முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 20.70 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை கனடா நாட்டில் செயல்படுத்தியுள்ளனர். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கு மட்டுமின்றி உலகத்திற்கே வழிகாட்டியாக செயல்பட்டு, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மாணவ, மாணவிகள் படிக்கும் காலத்திலேயே தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் தமிழகத்தில் 30 கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதில் திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 6 கல்லூரிகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 2 கல்லூரிகள், ஒரு தொழிற்பயிற்சி நிலையம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் 2 கல்லூரிகள், பழனியில் ஒரு சித்தா கல்லூரி ஆகியவை தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. நத்தம் சட்டமன்ற தொகுதியில் விரைவில் அரசு கல்லூரி தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இளைஞர்களின் விளையாட்டுத்திறனை மேம்படுத்தும் வகையில் தொப்பம்பட்டியில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு தமிழகம் முழுவதும் 22 விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படவுள்ளன. அதில் ஆத்தூர் மற்றும் ஒட்டன்சத்திரம் பகுதிகளில் தலா ஒரு விளையாட்டு மைதானம் அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிகாலத்தில் மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

அரசுப்பள்ளி மாணவ, மாணவிகள் அரசு பேருந்துகளில் இலவச பயணம் திட்டத்தை செயல்படுத்தினார். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்விக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இந்த திட்டங்களை மாணவ, மாணவிகள் நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும், என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை ஆ. சந்திரன்

**ஆகஸ்ட் 11 (1996)**



**இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் பகுதி பிரதிநிதியாகவும் – தென்சென்னை மாவட்டத்தில், வட்டக் கழகச் செயலாளர், மயிலை பகுதிக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**